## கட்புல அரங்கேற்றற் கலைகள் பல்கலைக்கழகம் – 2014

கட்புல அரங்கேற்றற் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சற்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கட்புல அரங்கேற்றற் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 91,147 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 385,518,203 கிரயத்திலான மாணவர் விடுதி மற்றும் நிர்வாகக் கட்டித்தின் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்து பயயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அப்பெறுமதி மூலதனமாக்கப்படாமல் நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

2014 ஆம் ஆண்டிற்காக அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் பொருத்துதல், ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்களின் சேர்த்தல்கள் (Additions) தொடர்பாக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலை மற்றும் நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகளுக்கிடையே ரூபா 348,749 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு விடுதியிலுள்ள மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 82,280 தொகையான நிலுவை விடுதிக் கட்டணம் 2015 யூலை 15 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் செலுத்த வேண்டியதாக குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 594,145 தொகையில் ரூபா 153,338 தொகை 01 ஆண்டு முதல் 02 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு கூடுதலாக அனுப்பிவைக்கப்பட்டிருந்த ரூபா 31,708 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடப்படாமல் இருந்ததுடன், 2006 ஆம் ஆண்டிலிருந்து களஞ்சியப் பொறுப்பாளராக சேவை புரிந்த

உத்தியோகத்தரரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 67,259 தொகை 09 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பிரிவு | உத்தியோகபூர்வ வீடொன்றுக்கு உரித்தான உத்தியோகத்தரொருவர் அதனைப் பயன்படுத்தும் போது அதற்கான பட்டியல்கள் குறித்த உத்தியோகத்தராலேயே செலுத்தப்பட வேண்டிய போதிலும், உபவேந்தர் தமது சொந்த வீட்டில் வசித்து அதற்குரிய நீர் மற்றும் மின் பட்டியல் என்பவற்றுக்காக மீளாய்வாண்டின் சனவரி முதல் ஒக்தோபர் மாதம் வரை ரூபா 273,408 தொகை பல்கலைக்கழகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு மற்றும் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியினரின் வருகைப் பதிவேடு மற்றும் விடுமுறைப் பதிவேடு மூலம் வருகை மற்றும் வெளியேறல் என்பன உறுதிப்படுத்தப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 211,838,951 தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| | (i) நிதிப்பிரமாணம் 394(இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 47,579 பெறுமதியான இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 395(இ) | வங்கி நடைமுறை கணக்கொன்றில் காணப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் ஒவ்வொரு மாத இறுதியிலும் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் நிலைமை தொடர்பாக அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்கிணக்கக் கூற்றொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வுத் திகதியான 2015 யூன் 19 ஆந் திகதி வரை இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்தவை 2015 ஏப்ரல் 30 இற்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களே என அவதானிக்கப்பட்டது தயாரிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | (iii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டு எனினும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 257,439 பெறுமதியான 35 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை | (i) தொலை மற்றும் தொடர் கற்கை நிலையத்தினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது நிதிக்குழுவின் பரிந்துரை மற்றும் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 895,234 தொகை படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>(ii) திறைசேரி அங்கீகாரம் இன்றி 2014 மார்ச் 26 ஆந் திகதிய 06/2014 மற்றும் 2014 யூலை 24 ஆந் திகதிய 06/2014 (1) ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தாபன சுற்றறிக்கை கடிதங்களின் பிரகாரம் உபசரிப்பு செலவினங்களுக்கான கொடுப்பனவு களுக்குரிய செலவினங்கள் மீள் நிரப்புவதற்குப் பதிலாக படிகளாக மாதாந்த சம்பளத்தில் 8 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரை கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது, மீளாய்வாண்டின் போது ரூபா 769,985 தொகை உபசரிப்பு செலவினம் படிகளாக செலுத்தப்பட்டிருந்ததுடன், சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு படியொன்றாக கொடுப்பனவு செய்வதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாததன் காரணமாக அது சம்பள முரண்பாடு தொடர்பிலும் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (உ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை மற்றும் 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | கட்புல அரங்கேட்டற் கலைகள் பல்கலைக்கழகத்தின் போக்குவரத்து வசதிகளுக்கு உரித்தான உத்தியோகத்தர்களுக்கு அலுவலகத்திலிருந்து வீடு வரை போக்குவரத்து வசதிகளை வழங்க முடியுமாக இருந்த போதிலும், சுற்றறிக்கைக்கு புறம்பாக மாதாந்தம் ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 30,000 வீதம் 05 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,669,193 கூட்டுத்தொகையான போக்குவரத்துப் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | 1998 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய 737 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | உடன்படிக்கை மற்றும் பிணைப்பொறுப்புக்களை மீறியதால் கிடைக்கும் அனைத்து பெறுவனவுகள் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும், உடன்படிக்கை மீறியமையால் 02 ஆண்டுகளுக்கு முன்னர் கிடைக்கப்பெற்ற ரூபா 1,494,871 தொகை முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

**2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிலிருந்து விலகி உபவேந்தருக்கு உரித்தான மாதாந்த எரிபொருள் படிகளுக்குப் பதிலாக வரையறை இன்றி உத்தியோகபூர்வ வாகனத்திற்காக எரிபொருள் வழங்கியமையால் 2085.70 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 335,883 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

**3. நிதிமீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 6,414,730 தொகை பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 18,668,242 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 12,253,512 ஆல் குறைவடைந்தமைக்காக அரசின் மானியங்கள் ரூபா 45,999,444 ஆல் அதிகரத்தமை மற்றும் தொலை மற்றும் தொடர் கற்கை நிலையத்தின் வருமானம் ரூபா 25,656,869 ஆல் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஆராய்ச்சி மானியங்கள் பயன்பாடு மற்றும் ஆராய்ச்சிப் படி கொடுப்பனவு**

மீளாய்வாண்டிற்காக கிடைத்த ரூபா 1,000,000 தொகையான ஆராய்ச்சி உதவி தொகையில் ரூபா 302,857 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆராய்ச்சி மானியங்களுக்கான ஏற்பாட்டுத் தொகை ரூபா 19,700,000 தொகையாக இருந்ததுடன், கல்வி மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களுக்காக ரூபா 17,679,206 தொகை செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ஆராய்ச்சி படிகள் பெற்றுக்கொண்ட 110 விரிவுரையாளர்களுக்கிடையே 43 பேர் தமது ஆராய்ச்சி தொடர்பான செயன்முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஆராய்ச்சி விவாதம்**

2014 ஆம் ஆண்டின் ஆராய்ச்சி விவாதம் 2014 நவம்பர் 18 மற்றும் 19 ஆகிய இரு திகதிகளில் நடாத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 279,119 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதற்காக நுண் கலைப்பிரிவு பீடத்தின் 10 விரிவுரையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும், சங்கீத கலைப் பீடத்தின் இரண்டு பேருக்கும், நாடக மற்றும் நடனக் கலைப்பீடத்தின் 06 பேருமாக 18 அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(இ) பல்கலைக்கழகங்களை சர்வதேச தரப்படுத்துவதற்குரிய நியமங்களின் படி, ஆராய்ச்சி நியமங்கள் முக்கியமானவையாக இருந்த போதும், ஆராய்ச்சிக்கான ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்பு என்பவை குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் சர்வதேச தரப்படுதலின் பிரகாரம் கட்புல அரங்காட்டற் கலைகள் பல்கலைக்கழகம் 14,524 ஆவது இடத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 2,117,041,000 தொகையான 06 காணிகள் தொடர்பான சட்டரீதியான உரித்தை கணக்காய்வுத் திகதியான 2015 யூலை 15 ஆந் திகதி வரையிலும் பல்கலைக்கழகத்திற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உடன்படிக்கை மீறிய இரண்டு விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 1,617,048 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், நிதிக்கூற்றுக்களில் இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 03 ஆண்டுகள் முதல் 07 ஆண்டுகள் வரையான காலமாக இருந்து வரும் இந்த கிடைக்க வேண்டிய தொகையின் பகுதியொன்று சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு விருப்பம் தெரிவித்திருந்த போதும், 2015 யூலை 15 ஆந் திகதி வரையிலும் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சிக்காக இரண்டு சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கு ரூபா 1,000,000 தொகை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருந்தது. இந்த ஆராய்ச்சி 2010 மார்ச் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செயன்முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா 250,000 வீதம் இறுதி தவணைப் பணத்தை விடுவிக்காமல் ரூபா 500,000 தொகை ஆராய்ச்சி நிதியத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 37,710 புத்தகங்கள் இரவலாக வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 61,237 பெறுமதியான 96 புத்தகங்கள் 2015 யூலை 15 ஆந் திகதி வரையிலும் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பதவியணியினர் நிருவாகம்

கட்புல அரங்கேற்றற் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கட்புல அரங்கேற்றற் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினரை ஒப்பீடு செய்த போது வெற்றிடங்கள் 27 ஆகவும் மிகை எண்ணிக்கை 35 ஆகவும் இருந்ததுடன், கல்விசாரா பதவியணியினர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 39 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நியமிக்கப்பட்ட 35 தற்காலிக விரிவுரையாளர்கள் மற்றும் மதியுரையாளர்கள் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், நுண்கலைக் கற்கைப் பீடத்தில் தற்காலிக 15 விரிவுரையாளர்களும் 05 மதியுரையாளர்களும் மிகையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திருத்தம் செய்யப்பட்டு நிரந்த பதவியணிக்கு ஆட்சேர்ப்பதற்கு செயற்திறனான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) கல்விசாரா பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு ஒப்பாக 16 சதவீதம் வெற்றிடங்களாக இருந்ததுடன், நிறைவேற்று பதவியணியில் 06 வெற்றிடங்களில் 04 பதவிகள் நீண்டகாலமாக வெற்றிடங்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2013 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் ரூபா 99,522 தொகை செலவிடப்பட்டு உடனடியாக நிரப்புவதற்கு தேவையான தேவையான பதவியொன்றான ஒழுக்காற்று உத்தியோகத்தர் (Chief Marshall) பதவிக்காக பத்திரிகை விளம்பரம் மேற்கொண்டு

02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் / இலக்குகள் 07 குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஏதேனும் குறிப்பான காலப்பகுதிக்குள் செயற்பாடுகளுக்காக செலவினத்தை நிதியளிப்பதற்காக உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக தெளிவாக நிரூபணமாக்கியருக்கவில்லை.

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குரிய பிரகாரம் பௌதீக மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றங்கள் காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த ரீதியில் மதிப்பீடு செய்யப்பட்டு செயன்முடுன்னேற்ற அறிக்கைகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பிடப்பட்ட போது 38 சதவீதம் தொடக்கம் 117 சதவீதம் வரையான வீச்சில் போதியளவில் முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஆ) ஒப்பந்தக் கட்டுப்பாடு
(இ) நிதிக் கட்டுப்பாடு
(ஈ) நூலகக் கட்டுப்பாடு
(உ) வாகனக் கட்டுப்பாடு
(ஊ) கொள்வனவு